## பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தொழிற்படு மூலதன கடன் திட்டங்களின் முக்கிய அம்சங்கள்

| அம்சங்கள் | | கடன் திட்டம் | | |
|---|---|---|---|---|
| | | சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக்கடன் வசதி (மீள்நிதியிடல் திட்டம்) | சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக்கடன் வசதி (கட்டம் II) | கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டம் |
| 1 | சட்ட ஏற்பாடு | நாணய விதிச் சட்டத்தின் 88ஆம் பிரிவு | நாணய விதிச் சட்டத்தின் 83ஆம் பிரிவு | நாணய விதிச் சட்டத்தின் 108ஆம் பிரிவு |
| 2 | பங்கேற்கும் வங்கிகள் | உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மட்டும் | உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் |
| 3 | தொழிற்படும் பிரதேசம் | தீவுமுழுவதும் | | |
| 4 | நிதியிடல் | ஒதுக்குகளைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கி | நாணய விதிச் சட்டத்தின் 83ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கி | கொடுகடன் உத்தரவாதம் - இலங்கை மத்திய வங்கி (ஒதுக்குகள்), வட்டி உதவுதொகை - இலங்கை அரசாங்கம் (இலங்கை மத்திய வங்கியின் இலாபங்கள்) |
| 5 | அமுல்படுத்தப்படும் காலம் | 2020.04.01 - 2020.05.29 | 2020.06.19 - 2020.08.31 | 2020.07.01 - 2020.08.31 |
| 6 | தகுதியுடைய வியாபாரங்கள் | 2020ஆம் ஆண்டு 5ஆம் இலக்க நாணய சபையின் சுற்றறிக்கையின் 2ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு கொவிட்-19 நோய்த்தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஏதேனும் வியாபாரங்கள் தகுதியுடையதாக இருக்கும். அதன்படி தகுதியுடைய வியாபாரங்கள் என்பது ஒரு பில்லியன் ரூபாவினை விடக் குறைந்தளவிலான வருடாந்த புரள்வினைக் கொண்ட வியாபாரங்கள் ஆகும் (ரூ. 1 பில்லியன்). எனினும் 1 பில்லியன் வருடாந்த புரள்வு வரையறையானது சுற்றுலாத்துறை, ஏற்றுமதி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏற்பாட்டு பணி வழங்கலில் ஈடுபட்டுள்ள ஏதேனும் வியாபாரங்களுக்கு ஏற்புடையதல்ல. | | |
| 7 | உயர்ந்தபட்ச கடன் வரையறை | ரூபா இருபத்தைந்து மில்லியன் (ரூ.25 மில்லியன்) | | |
| 8 | துணைக் கடன்பெறுநர்களுக்கு ஏற்புடைய வட்டி வீதம் | ஆண்டுக்கு நான்கு சதவீதம் (4 %). ஏதேனும் சந்தர்ப்பங்களில் பங்கேற்கும் நிதி நிறுவனங்கள் துணை கடன்பெறுநர்களுக்கு ஆண்டுக்கு நான்கு சதவீதத்தினை விட உயர்ந்த வீதத்தில் வழங்கக்கூடாது (4 %) | | |
| 9 | இலங்கை மத்திய வங்கிக்கு பங்கேற்கும் நிதி நிறுவனங்களினால் செலுத்தப்படும் வட்டி வீதம் | ஆண்டுக்கு ஒரு சதவீதம் (1 %) | | ஏற்புடையதல்ல |
| 10 | சலுகைக் காலம் | வியாபாரத்தின் தன்மையினைச் சார்ந்து உயர்ந்தபட்சம் ஆறு (06) மாதங்கள். | | |
| 11 | மீள்கொடுப்பனவுக் காலம் | கடன் மீள்கொடுப்பனவின் உயர்ந்தபட்சக் காலம் சலுகைக் காலம் உள்ளடங்கலாக இருபத்துநான்கு (24) மாதங்கள் | | |
| 12 | கொடுகடன் உத்தரவாதம் | ஏற்புடையதல்ல | | உத்தரவாத உள்ளடக்கமானது கடன் அளவின் அடிப்படையில் பின்வருமாறு அமைந்திருக்கும்.<br>80% - ரூ.0.5 மில்லியனுக்கு குறைவாக<br>70% - ரூ.0.5 மில் இருந்து ரூ.1 மில். வரை<br>60% - ரூ.1 மில். இருந்து ரூ.10 மில். வரை<br>50% - ரூ.10 மில். இருந்து ரூ.25 மில். வரை |
| 13 | உத்தரவாதக் கட்டுப்பணம் | ஏற்புடையதல்ல | | துணைக் கடன் பெறுமதியில் பூச்சியம் தசம் ஐந்து சதவீதம் (0.5%) |
| 14 | வட்டி உதவுதொகை | ஏற்புடையதல்ல | | ஆண்டுக்கு ஐந்து சதவீதம் (5%) |
| 15 | பிணையுறுதி | பங்கேற்கும் நிதி நிறுவனங்கள் வழங்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பான கடன் இடர்நேர்வினைக் குறைத்துக் கொள்வதற்குப் பிணையுறுதியினைப் பெற்றுக்கொள்ளலாம் | | பங்கேற்கும் நிதி நிறுவனங்கள் வியாபாரங்களின் நீடித்து நிலைத்துநிற்கும் தன்மை அல்லது நிதிப் பாய்ச்சல்களைக் கருத்திற்கொண்டு கடன்களை வழங்குவதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள் |

* உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் 2020.08.31 வரை கடன்களைத் தொடர்ந்து வழங்கும்